1972 மார்ச் 20]

விற்பனே வரித்துறை அலுவலர்கள்

* 573 வினு—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

விற்பனே வரி இலாகாவில் பணிபுரியும் அலுவலர்களே மது விலக்குத்துறைக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனேயில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : இல்லே.

திரு. கே. எ. வகாப் : தலேவர் அவர்களே, முன்பு ஒருமுறை மதுவிலக்கு அமல் செய்தபொழுது மதுவிலக்கு இலாகாவில் பணி புரிந்த ஊழியர்கள் விற்பனே வரி இலாகாவுக்கு மாற்றப்பட்டதாகத் தெரிகிறது. இப்போது மதுவிலக்கு ரத்து செய்திருப்பதால், முன்பு விற்பனே வரி இலாகாவுக்கு மாற்றப்பட்டவர்களே மறுபடியும் இந்தத் துறைக்கு எடுத்துக்கொள்வதால் அவர்களுக்கு உரிய பதவி உயர்வுகள் போன்ற சலுகைகள் கிடைக்க வழியிருக்கும் என்று சொல்லப் படுகிறதே, இப்படிச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : தலேவர் அவர்களே, வருவாய்த் துறையிலே இன்னும் பணியாளர்கள் கூடுதலாக்கப் பட்டிருக்கிருர்கள். வருவாய்த் துறையின் பணிகள் உரிமங்கள், அனுமதி வழங்குதல், ஏலங்கள் விடுதல், வருவாய் வசூலித்தல் போன்றவை. அந்தத் துறையிலே அந்தப் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, அவர்கள் அந்தத் துறையிலிருந்து இந்தத் துறைக்கு அழைக்கப்பட வேண்டிய அவசியமில்லேயென்று அரசு கருதுகிறது.

Lives lost in Indo-Pakistan war

*** 574. Q.—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon.** the Chief Minister be pleased to state—

(*a*) the number of fighting personnel from Tamil Nadu who died in the Indo-Pakistan war; and

(*b*) how much money has been paid to families of such soldiers?

[1972 மார்ச் 20

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இதுவரை (18—3—1972 வரை) கிடைத்த தகவலின்படி தமிழகத்தைச் சேர்ந்த 107 வீரர்கள் உயிரிழந்தனர்.

(இ) ரூபாய் 4,75,000 இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, உயிரிழந்த நம் வீரர்களுக்கு நம்முடைய அரசாங்கம் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு பணம் கொடுத்திருக்கிறது? பணம் கொடுத்ததோடு மட்டுமல்லாமல், நிலம் அளித்தல் போன்ற உதவிகள் செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, உயிரிழந்த வீரர்களின் குடும்பங்களுக்குப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே நாம் அறிவித்திருப்பதைப்போல இறந்துபோன படைவீரரின் குடும்பத்திற்கு அல்லது முழுமையாக ஊனமுறும் படைவீரரின் குடும்பத்திற்கு சிறப்பு நிவாரணத் தொகை 5 ஆயிரம் ரூபாய் அளிக்கப்பட்டிருக்கிறது. போர் வீரரின் குடும்பத்திற்கு 3 ஏக்கர் புஞ்சை நிலம் அல்லது $1\frac{1}{2}$ ஏக்கர் நஞ்சை நிலம்—இரண்டில் ஒன்று—இலவசமாக வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, நாட்டிற்குப் போரிட்டு வீரத்தியாகம் செய்த வீரர்களின் குடும்பங்களுக்கு உதவுவதோடு, எதிர்காலத்தில் அவர்களுடைய சந்ததியினருக்குச் சலுகைகள் அளிக்க ஏதாவது செயற்குறிப்பு தயாரிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பதவியிலிருக்கும் அல்லது படையிலிருந்து விடுவிப்பு பெற்றிருக்கும் படைவீரர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் அளிக்கப்படும் சில சிறப்புச் சலுகைகள்: விடுவிப்பு பெற்றவர்களுக்கு அரசுப் பணிகளில் சேருவதற்கு வயது வரம்பு விதிகள் தளர்த்திக் கொடுப்பது, படைவீரர்களின் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகை—தொழில் கல்வி பயில்வோருக்கு இலவசக் கல்வி, தொழில் கல்லூரியில் பயில்வோருக்கு இலவசக் கல்வி, மேலும் பள்ளிச் சீருடை, புத்தகங்கள், ஹாஸ்டல் சார்ஜஸ் ஆகியவற்றுக்கான செலவு முழுவதையும் அரசு ஏற்றுக்கொள்கிறது. உயிரிழந்த வீரர்களின் மகள் திருமணத்திற்கு ரூபாய் 1,500 வரை இலவசமாக அளிக்கப்படும். படைவீரர்களின் குழந்தைகள் அரசுப் பணிகளில் சேரும்போது முதன்மையிடம் அளிக்கப்படும். இப்படிப்பட்ட பல சலுகைகளை அரசு அளிக்கிறது.

1972 மார்ச் 20]

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, இந்த நிலச் சீர்திருத்தச் சட்டப்படி, நிலங்களை உயிரிழந்த குடும்பத்தார்களுக்கு அருகாமையிலேயே ஜாரி செய்து கொடுக்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்படி நிலங்களுக்கு அருகாமையிலேயே அவர்கள் குடும்பங்கள் இருக்குமானால், 3 ஏக்கர் புஞ்சை அல்லது 1½ ஏக்கர் நஞ்சை என்ற அளவில் கொடுக்கப்படுகிறது. அவர்களுடைய குடும்பங்களுக்கு அருகாமையிலுள்ள நிலங்கள் இருந்தாலும் அப்படி வழங்கப்படுகின்றன.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைச் சேர்ந்த உயிரிழந்த 107 பேரில் எத்தனை பேர் பிற்பட்டவர்கள், எத்தனை பேர் தாழ்த்தப்பட்டவர்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாவட்டவாரியாக எண்ணிக்கை இருக்கிறது. பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் என்ற கணக்கு இல்லை.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே, இந்தப் போரிலே உயிரிழந்தவர்களுக்கு நம்முடைய மாநிலம்தான் அதிகமான சலுகைகள் வழங்கியிருக்கிறதென்று கூறப்படுகிறதே, அது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டு நான் பார்க்கவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்தியா–பாகிஸ்தான் போரில் இறந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர்களுக்கு மத்திய அரசாங்கம் ஏதேனும் உதவி அளித்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மத்திய அரசு தனியாக உதவி அளித்திருக்கிறது. அவர்களுக்கு வீரப் பதக்கங்கள், பரமவீரச் சக்கரம், மகாவீரச் சக்கரம், வீரச் சக்கரம் போன்றவை அப்படைவீரர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமான பேர் போரில் உயிர் இழந்திருக்கிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட 107 பேரில் அதிகமாக இறந்தவர்கள் 40 பேர் வடஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

முதல் அமைச்சர் அவர்களின் ரஷியப் பயணம்

*575 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

அண்மையில் நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ரஷிய நாட்டிற்கு வருகை தரவேண்டுமென்று அந்நாட்டினர் அழைப்பு விடுத்துள்ளார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆம். தம்முடைய வசதிப்படி ரஷ்ய நாட்டிற்கு வருகை தருமாறு தமிழக முதல்வரை இந்தியாவில் உள்ள ரஷ்ய நாட்டு தூதர் திரு. பேகாவ் அழைப்பு விடுத்துள்ளார்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலேயே நமது மாநிலத்தில்தான் அண்மையில் சிறப்பான ஒரு சோஷலிச பட்ஜெட்டை நமது முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் அளித்திருக்கிறார்கள். ரஷ்யா போன்ற சோஷலிச நாடுகளுக்கு நேரில் சென்று வருவதன் மூலம், மேலும் நமது கொள்கை வன்மை பெறும் என்ற அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரைவிலே தம்முடைய சுற்றுப்பயணத்தை மேற்கொள்வார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மற்றவர்களைப் பார்த்து நாம் சோஷலிசம் கற்றுக்கொள்ளத் தேவை இல்லை. நம் மண்ணுக்கு ஏற்ப சமதர்ம திட்டங்களை நாம் வகுத்துக் கொள்ளலாம். சோசலிஷ நாடுகளுக்கு நேரில் சென்று அதன் திட்டங்களை அறிந்துகொள்வதன் மூலம், மேலும் நம் கொள்கைக்கு ஆக்கம் அளிக்க உதவியாக இருக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதை முன்னிட்டு நான் சோவியத் ரஷ்யாவுக்குச் செல்வதாக இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் எப்போது ரஷ்யாவுக்குப் போக இருக்கிறார்